பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**04.06.2024 12 40 PM TUESDAY**

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 298 தொகுதிகளிலும், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி 225 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளன.

- தமிழகத்தில் திமுக கூட்டணி 37 தொகுதிகளிலும், பாமக மற்றும் தேமுதிக தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

- ஆந்திர சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி பெரும்பாலான இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

- ஒடிஷாவில் பிஜேபி அதிக இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

- இந்தோனேஷிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சுமித் ரெட்டி – சிக்கி ரெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலில் அனைத்து தொகுதிகளுக்குமான முன்னணி நிலவரங்கள் தெரியவந்துள்ளன.

543 தொகுதிகளைக் கொண்ட மக்களவைக்கு நடைபெற்ற தேர்தலில் ஒரு தொகுதியில் பிஜேபி போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய 542 தொகுதிகளில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 298 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

இதில் பிஜேபி -242 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

ஐக்கிய ஜனதாதளம் 14 தொகுதிகளிலும்

சிவசேனா 6 தொகுதிகளிலும்

தெலுங்கு தேசம் 16 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளன.

<<<<<<>>>>>>

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி -225 தொகுதிகளில் முன்னிணியில் உள்ளது.

இதில் காங்கிரஸ் -94 தொகுதிகளிலும்

சமாஜ்வாதி கட்சி 33 தொகுதிகளிலும்

திரிணமூல் காங்கிரஸ் 28 தொகுதிகளிலும்

ஆம் ஆத்மி 3 தொகுதியிலும்

ராஷ்ட்ரீய ஜனதாதள் 5 தொகுதிகளிலும்

திமுக 21 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திரமோடி தாம் போட்டியிட்ட வாரணாசி தொகுதியில் 83 ஆயிரத்து 498 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

காந்திநகர் தொகுதியில் மத்திய அமைச்சர் திரு அமித்ஷா முன்னிலை வகிக்கிறார்.

மத்திய அமைச்சர் திரு அனுராக் தாக்கூர், ஹமீர்பூர் தொகுதியில் முன்னிலை வகிக்கிறார்.

நாக்பூரில் பிஜேபி வேட்பாளர் திரு நிதின்கட்கரி முன்னிலை வகிக்கிறார்.

அமேதியில் மத்திய அமைச்சர் திருமதி ஸ்மிருதி இரானி முன்னிலையில் உள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி ரெய்பரேலியில் ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 249 வாக்குகள் வித்தியாசத்திலும், வயநாடு தொகுதியில் 2 லட்சத்து 24 ஆயிரத்து 424 வாக்குகள் வித்தியாசத்திலும் முன்னிலை பெற்றுள்ளார்.

திருவனந்தபுரம் தொகுதியில் மத்திய அமைச்சர் திரு ராஜீவ்சந்திரசேகர் முன்னிலை பெற்றுள்ளார்.,

வடமும்பை தொகுதியில் பிஜேபி வேட்வாளர் திரு பியூஸ் கோயல் முன்னிலை வகிக்கிறார்.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் 80 தொகுதிகளுக்குமான முன்னணி நிலவரங்கள் தெரியவந்துள்ளன.

இதில பிஜேபி 36 தொகுதிகளிலும்,

சமாஜ்வாதி 34 தொகுதிகளிலும், காங்கிரஸ் ஏழு தொகுதிகளிலும், ராஷ்ட்ரிய லோக்தள் 2 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளது.

பீகாரில் 40 தொகுதிகளுக்கும் முன்னிலை நிலவரங்கள் தெரியவந்துள்ளன.

பிஜேபி 13 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதாதளம் 15 தொகுதிகளிலும், ராஷ்ட்ரிய ஜனதாதள் 3 தொகுதிகளிலும், காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கிறது.

புதுச்சேரியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு வைத்தியலிங்கம் முன்னனில பெற்றுள்ளார்.

அருணாச்சலப்பிரதேசத்தில் 2 தொகுதிகளிலும் பிஜேபி முன்னிலை வகிக்கிறது.

<<<<<<>>>>>>

குஜராத் மாநிலத்தில் உள்ள 26 தொகுதிகளில் பிஜேபி 23 தொகுதிகளிலும், காங்கிரஸ் 2 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

ஹரியானாவில் உள்ள 10 தொகுதிகளிலும் காங்கிரஸ் 5 தொகுதிகளிம், பிஜேபி 5 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளன.

இமாச்சலப்பிரதேசத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் பிஜேபி முன்னிலை வகிக்கிறது.

ஜம்மு காஷ்மீரில் தேசிய மாநாட்டு கட்சி 2 தொகுதிகளிலும், பிஜேபி 2 தொகுதிகளிலும், சுயேட்சை ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றனர்.

சண்டிகரில் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது.

சத்தீஸ்கரில் பிஜேபி 10 தொகுதிகளிலும், காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் 48 தொகுதிகளுக்கு முன்னணி நிலவரம் தெரியவந்துள்ளது.

இதில் பிஜேபி 15 தொகுதிகளிலும்,

சிவசேனா 10 தொகுதிகளிலும்,

தேசியவாத காங்கிரஸ் ஒரு தொகுதியிலும்,

சிவ்சேனா உத்தவ் தாக்கரே 4 தொகுதிகளிலும்,

சரத்பவார் தேசியவாத காங்கிரஸ் 7 தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

நாக்பூரில் மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரியும், வட மும்பையில் மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயலும் முன்னிலை பெற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் 42 தொகுதிகளுக்கு முன்னணி நிலவரங்கள் தெரியவந்துள்ளன.

இதில் திரிணாமுல் காங்கிரஸ் 24 தொகுதிகளிலும், பிஜேபி 15 தொகுதிகளிலும், காங்கிரஸ் 2 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கிறது.

<<<<<<>>>>>>

கேரளாவில் உள்ள 20 மக்களவைத் தொகுதிகளிலும் காங்கிரஸ் 13 தொகுதிகளிலும், இந்திய யூனயின் முஸ்லீம் லீக் மற்றும் பிஜேபி தலா 2 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட, கேரள காங்கிரஸ் மற்றும் ஆர் எஸ் பி  தலா ஒரு தொகதியிலும் முன்னிலை வகிக்கிற.

பிஜேபி வேட்பாளர்களான முத்திய இணையமைச்சர் திரு ராஜீவ் சந்திரசேகர் திருவனந்தரபுரத்திலும், நடிகர் திரு சரேஷ் கோபி திருச்சூரிலும் முன்னிலை பெற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

கர்நாடகாவில் உள்ள 28 தொகுதிகளிலும் பிஜேபி 16 தொகுதிகளிலும், காங்கிரஸ் 9 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதாதளம் 3 தொகுதிகளிலும், முன்னிலை பெற்றுள்ளன.

<<<<<<>>>>>>

மத்தியப்பிரதேசத்தில் உள்ள 29 தொகுதிகளிலும் பிஜேபி முன்னிலை வகிக்கிறது.

<<<<<<>>>>>>

ராஜஸ்தானில் உள்ள 25 தொகுதிகளில் பிஜேபி 13 தொகுதிகளிலும், காங்கிரஸ் 9 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ராஷ்ட்ரிய லோக்தந்ரிக், பாரத் ஆதிவாசி கட்சிகள் தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலோடு இடைத்தேர்தல் நடைபெற்ற 25 தொகுதிகளில் 15 தொகுதிகளில் பிஜேபி முன்னிலை பெற்றுள்ளது.

ஏழு தொகுதிகளில் காங்கிரஸ் முன்னிலை வகிக்கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, சமாஜ்வாதி மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் தலா ஒரு தொகுதியிலும், முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<<>>>>>>

ஆந்திர சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பெரும்பாலான இடங்களில் தெலுங்கு தேசம் முன்னிலை வகிக்கிறது.

175 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் தெலங்கு தேசம் ஒரு தொகுதியில் வெற்றிபெற்று 130 தொகுதியில் முன்னிலை வகிக்கிறது

அதன் கூட்டணி கட்சியான பிஜேபி 7 தொகுதிகளிலும்,

ஜனசேனா 20 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளது.

ஆளும் ஒய் எஸ் ஆர் காங்கிரஸ் 17 தொகுதிகளில் மட்டுமே முன்னிலையில் உள்ளது.

ஒடிஷா சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி கூடுதல் இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

147 உறுப்பினர்களை கொண்ட ஒடிஷா சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் 74 தொகுதியில் பிஜேபி முன்னிலை வகிக்கிறது.

ஆளும், பிஜூ ஜனதாதள் 57 தொகுதிகளிலும்,

காங்கிரஸ் 13 தொகுதியிலும்,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும்,

ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா ஒரு தொகுதியிலும், சுயேட்சைகள் இரண்டு தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

<<<<<<>>>>>>

செய்திகளை தொடர்வது சுமித்ரா ரத்னம்....

மக்களவைத் தேர்தலில் தமிழகத்தைப் பொறுத்தவரை திமுக 21 தொகுதிகளிலும், காங்கிரஸ் எட்டு தொகுதிகளிலும், விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சி தலா 2 தொகுதியிலும், பாமக தேமுதிக மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கிறது.

அரக்கோணம் மக்களவைத் தொகுதியில் திமுக வேட்பாளர் திரு ஜெகத்ரட்சகன், அஇஅதிமுக வேட்பாளர் திரு விஜயனைவிட 30 ஆயிரத்து தொள்ளாயிரத்து 56 வாக்குகள் கூடுதலாகப் பெற்று முன்னிலை பெற்றுள்ளார்.,

ஆரணியில் திமுக வேட்பாளர் திரு தரணி வேந்தன் 12 ஆயிரத்து 221 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

மத்திய சென்னையில் திமுக வேட்பாளர் திரு தயாநிதிமாறன் 18 ஆயிரத்து 602 வாக்குகள் வித்தியாசத்திலும் முன்னிலை பெற்றுள்ளார்.

வடசென்னையில் திமுக வேட்பாளர் திரு கலாநிதி வீராசாமி 23 ஆயிரத்து 763 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

தென்சென்னையில் திமுக வேட்பாளர் திரு தமிழச்சி தங்க பாண்டியன் 11 ஆயிரத்து 15 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

சிதம்பரத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திரு தொல் திருமாவளவன் அஇஅதிமுக வேட்பாளரைவிட 11 ஆயிரத்து 590 வாக்குகள் கூடுதலாகப் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

கடலூரில் காங்கிரஸ் வேட்பாளர் திரு விஷ்ணு பிரசாத் 45 ஆயிரத்து 823 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

திண்டுக்கல் தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு சச்சிதானந்தன் ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 735 வாக்குகள் கூடுதலாப் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

ஈரோட்டில் திமுக வேட்பாளர் திரு பிரகாஷ் 30 ஆயிரத்து தொள்ளாயிரத்து 31 வாக்குகள்வித்தியாசதில் முன்னிலையில் உள்ளார்.

கள்ளக்குறிச்சியில் திமுக வேட்பாளர் திரு மலையரசன் 18 ஆயிரத்து 99 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

காஞ்சிபுரத்தில் திமுக வேட்பாளர் திரு செல்வம் 49 ஆயிரத்து 541 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

கன்னியாகுமரி தொகுதியில் காங்கிரிஸ் வேட்பாளர் திரு விஜய்வசந்த் 22 ஆயிரத்து 404 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

கரூரில் காங்கிரஸ் வேட்பாளர் செல்வி ஜோதிணி 20 ஆயிரத்து 86 வாக்குகள் வித்தியாசததில் முன்னிலை வகிக்கிறார்.

கிருஷ்ணகிரியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு கோபிநாத் 14 ஆயிரத்து 272 வாக்குகள் வித்தியாசத்தில்முன்னிலை பெற்றுள்ளார்.

மயிலாடுதுறையில் காங்கிரஸ் வேட்பாளர் செல்வி சுதா 76 ஆயிரத்து தொள்ளாயிரத்து 96 வாக்குகள்வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்,

நாகப்பட்டினத்தில் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு செல்வராஜ் 66 ஆயிரத்து 180 வாக்குகள் கூடுதலாகப் பெற்று முன்னிலையில் உள்ளார்.

நாமக்கல்லியில் அஇஅதிமுக வேட்பாளர் திரு தமிழ்மணி 2 ஆயிரத்து 23 வாக்குகள்வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

பெரம்பலூரில் திமுக வேட்பாளர் திரு அருண் நேரு சுமார் 84 ஆயிரத்து 873 வாக்குகள்வித்தியாசத்தில் முன்னலை வகிக்கிறார்.

பொள்ளாச்சியில் திமுக வேட்பாளர் திரு ஈஸ்வரசாமி 24 ஆயிரத்து 386 வாக்குகள்வித்தியாசத்திலும்., ராமநாதபுரத்தில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் வேட்பாளர் திரு நவாஸ் கனி 33 ஆயிரத்து 162 வாக்குகள்வித்தியாசத்திலும், சேலத்தில் திமுக வேட்பாளர் திரு செல்வகணபதி 6 ஆயிரத்து 525 வாக்குகள் வித்தியாசத்திலும்

சிவகங்கையில் காங்கிரஸ்வேட்பாளர் திரு கார்த்தி சிதம்பரம் 24 ஆயிரத்து 405 வாக்குகள் வித்தியாசத்திலும் முன்னிலை பெற்றுள்ளனர்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் திமுக வேட்பாளர் திரு டி ஆர் பாலு 84 ஆயிரத்து 192 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

தென்காசியில் திமுகவேட்பாளர் டாக்டர் ராணி 35 ஆயிரத்து 657 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

தஞ்சாவூரில் திமுக வேட்பாளர் திரு முரசொலி 60 ஆயிரத்து 220 வாக்குகள் வித்தியாசத்திலும், தேனியில் திமுக வேட்பாளர் திரு தங்கத் தமிழ்செல்வன் 29 ஆயிரத்து 255 வாக்குகள் வித்தியாசத்திலும், தூத்துக்குடியில் திருமதி கனிமொழி 81ஆயிரத்து 378 வாக்குகள் வித்தியாசத்திலும்முன்னிலை வகிக்கின்றனர்.

திருச்சியில் மதிமுக வேட்பாளர் திரு துரை வைகோ 37 ஆயிரத் 260 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

திருநெல்வேலியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு ராபர்ட் ப்ரூஸ் 24 ஆயிரத்து 100 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

திருப்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு சுப்புராயன் 17 ஆயிரத்து 162 வாக்குகள் முன்னிலை வகிக்கிறார்.,

திருவள்ளூரில் காங்கிரஸ் வேட்பாளர் திரு சசிகாந்த் செந்தில் 72 ஆயிரத்து 847 வாக்குகள் வித்தியாசத்திலும்,

திருவண்ணாமலையில் திமுக வேட்பாளர் திரு அண்ணாதுரை 25 ஆயிரத் 182 வாக்குகள் வித்தியாசத்திலும்,

வேலூரில் திமுக வேட்பாளர் திரு கதிர் ஆனந்த் ஏழாயிரத்து 146 வாக்குகள் வித்தியாசதிலும்,

விழுப்புரத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் திரு ரவிக்குமார் 12 ஆயிரத்து 667 வாக்குகள் வித்தியாசத்திலும்,

விருதுநகரில் தேமுதிக-வின் திரு விஜயபிரபாகரன் 7 ஆயிரத்து 283 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் திருமதி தாரகை கத்பட், தமக்கு அடுத்தப்படியாக வந்த பிஜேபி வேட்பாளர் திரு நந்தினியை விட 5 ஆயிரத்து தொள்ளாயிரத்து 92 வாக்குகள் கூடுதலாக பெற்று முன்னிலை வகிக்கிறார்.

<<<<<<>>>>>>

கோவையில் வாக்கு எண்ணிக்கை அமைதியாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ஹரிஹரன் - 66 செகண்ட்ஸ்)*

தருமபுரி மக்களவைத் தொகுதியில் பிஜேபி கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமக வேட்பாளர் திருமதி சௌமியா அன்புமணி முன்னிலை பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - தண்டபானி – 50 செகண்ட்ஸ்)*

மதுரையில் மார்க்சிஸ்ட் கமயூனிஸட் கட்சியின் வேட்பாளர் திரு வெங்கடேசன் முன்னலை வகிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ரகுராஜா – 30 செகண்ட்ஸ்)*

நீலகிரியில் திமுக வேட்பாளர் திரு ராசா முன்னிலை வகிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சரவணன் - செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சுமித் ரெட்டி – சிக்கி ரெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 18-21, 21-16, 21-17 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Vinson Chiu- Jennie Gai** இணையை வென்றது.

**<<<<<<>>>>>>**

நார்வே செஸ் போட்டியின் 7-ஆவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்யானந்தா 3-ஆவது இடத்தில் உள்ளார்.

மகளிர் பிரிவில் வைஷாலி 5-ஆவது இடத்தில் உள்ளார்.

**<<<<<<>>>>>>**